இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 201 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 19 – சனிக்கிழமை 02 மார்ச் 2024 – சென்னை 24 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 201: Thiruvalluvar Year - 2055 - Maasi 19 - Saturday 02 March 2024 - Chennai 24 Pages ₹ 5.00






தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.3.2024) தனது 71வது பிறந்தநாளையொட்டி சென்னை, வேப்பேரி, பெரியார் திடலில் அமைந்துள்ள தந்தை பெரியார் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், அமைச்சர் பெருமக்கள், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.3.2024) தனது 71வது பிறந்தநாளையொட்டி சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

## பல்லாயிரவர் நேரில் வாழ்த்து!

# திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள்!

## தமிழ்கூறு நல்லுலகம் எங்கனுமிருந்து வாழ்த்துகள் குவிந்தது!

**சென்னை, மார்ச் 2 -**

**கண்ணுக்குள் மணிபோல கட்சியையும் ஆட்சியையும் காத்து நிற்கும் தலைவர் எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் நாயகர் ஆளுமைமிக்க முதலமைச்சர் தந்தை பெரியாரின் சமூக நீதியையும், பேரறிஞர் அண்ணாவின் மாநில சுயாட்சிக் கொள்கையையும், தமிழினத் தலைவர் கலைஞரின் சமூக நலத் திட்டங்களையும் மனதில் தாங்கி திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று தனது 71வது பிறந்த நாளை கொண்டாடினார்.**

இதையொட்டி, சென்னை மெரினாவில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர் வளையம் வைத்தும், மலர் தூவியும் மரியாதை செலுத்தினார்.

இதைத் தொடர்ந்து, முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர்வளையம் வைத்தும், மலர்தூவியும் மரியாதை செலுத்தினார்.

இதன் பின்னர், சென்னை வேப்பேரியில் உள்ள பெரியார் திடல் சென்று தந்தை பெரியார் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மரியாதை செலுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, சென்னை கோபாலபுரம் இல்லம் சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அங்கு முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இதன்பின்னர், சி.ஐ.டி. காலனியில் இல்லத்துக்குச் சென்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அங்கு முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். அங்கு ராஜாத்தி அம்மாளிடம் வாழ்த்துப் பெற்றார். அப்போது, துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உடனிருந்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி, சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழக நிர்வாகிகள், தொண்டர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

கழகத் தலைவர் பிறந்தநாளையொட்டி, சென்னை அண்ணா அறிவாலயம் விழாக்கோலம் பூண்டிருந்தது. காலை முதலே தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் என பல்லாயிரக்கணக்கானோர் அண்ணா அறிவாலயத்தில் திரண்டு, திராவிட மாடல் நாயகரின் பிறந்தநாளை உற்சாகமாகக் கொண்டாடினர். அண்ணா அறிவாலயத்திற்கு வந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தொண்டர்கள் உற்சாக வரவேற்பளித்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.3.2024) தனது 71வது பிறந்தநாளையொட்டி சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

பின்னர், அண்ணா அறிவாலயம் கலைஞர்அரங்கில்முதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் வாழ்த்து கூறினர். கூட்டணி கட்சித் தலைவர்கள், தி.மு.க. முன்னணி நிர்வாகிகள் முதலமைச்சருக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

அப்போது, கேக் வெட்டி தமது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

இதனைத் தொடர்ந்து, பல்லாயிரக் கணக்கான தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் வரிசையில் நின்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர். புத்தகங்களை பரிசாக வழங்கி தொண்டர்கள் வாழ்த்துக் கூறினர். 4 மணிநேரத்திற்கும் மேலாக தொண்டர்கள் மற்றும் பொதுமக்களைச் சந்தித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துப் பெற்றார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, பிரதமர் மோடி, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்டோர் வாழ்த்துத் தெரிவித்தனர். குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், “நல்ல ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சியுடன் வாழவும், பல ஆண்டுகள் தொடர்ந்து நாட்டிற்கு சேவை செய்யவும் வாழ்த்துகள்” என்று குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு குறிப்பிட்டார். குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார்.

பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள் என்று குறிப்பிட்டுள்ளார். நல்ல ஆரோக்கியத்துடன் நீடூழி வாழ வாழ்த்துவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

முதலமைச்சருக்கு வாழ்த்துத் தெரிவித்து காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ள வாழ்த்துச்செய்தியில்,

“தமிழ்நாட்டின் முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்” என்றும், “நீண்ட ஆயுள் மற்றும் ஆரோக்கியத்துடன் வாழ வாழ்த்துகிறேன்” என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## வாழ்க தங்களின் தமிழர் தொண்டு!

# வெல்க தங்கள் பயணம்! வளர்க உங்கள் புகழ்!

### முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு – இனமானப் பேராசிரியரின் புதல்வர் அ.அன்புச்செல்வன் பிறந்த நாள் வாழ்த்து!

**சென்னை, மார்ச் 2 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்து - அவருக்கு, இனமானப் பேராசிரியர் அவர்களின் புதல்வர் அ.அன்புச்செல்வன் எழுதிய கடிதம் வருமாறு:-**

அன்பு கெழுமிய நண்பர், தலைவர் ஸ்டாலின் அவர்களே,

அன்பான வணக்கம்,

முதற்கண் என் சார்பாகவும் தங்களது பெரியப்பா பேராசிரியர் இல்லம் சார்பிலும் உங்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்.

தமிழ் மொழி வளர்ச்சிக்கும், தமிழர் பெருவாழ்வு காணவும், தமிழ் நாட்டிற்கான உங்கள் கனவுகள் நிறைவேறவும் நீங்கள் நீண்ட ஆயுளுடனும், நல்ல உடல் ஆரோக்கியத்துடனும் வாழ வாழ்த்துகிறேன்.

“மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்”

என்ற குறள் வரிகளுக்கு ஏற்ப தாங்கள் மகனாகவும், கழகத்தலைவராகவும் சிறப்பான முறையில் தொண்டாற்றியதற்குப் பாராட்டுகள்.

கலைஞர் நினைவிடத்தையும், புதுப்பிக்கப்பட்ட அண்ணா நினைவிடத்தையும் தாங்கள் அரும் பாடுபட்டு அமைத்ததற்கு உங்களை எத்தனை முறை, எப்படிப் பாராட்டினாலும் தகும்.



இவ்விரண்டு நினைவகங்களின் எழிலார்ந்த தோற்றத்தை, நேர்த்தியுடன் அமைத்ததும் மிகுந்த பாராட்டுக்குரியது.

தொடர்ச்சி 2ஆம் பக்கம்